உ

வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } சார்வரி - மாசி 10—3—61 { இதழ் 4

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றியங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

கனகாபிஷேகம்

" குரவனே அயன்அரி குரவ னேசிவன்
குரவனே தந்தைதாய் குரவ னேயெலாம்
குரவனே என்றுநூல் கூறும் உண்மையைக்
குரவனே என்னிடை இன்று காட்டினாய் "

1, 'சிவனே சிவஞானி' (திருமந்திரம் 1580) 'குருவே சிவம்' (1581) என்பது சைவத்தின் உண்மை. சுத்த சிவனே குருவாய் வந்து உயிர்களைத் தூய்மை செய்து அத்தனை (சிவனை) நல்கும் அருள் அனைவர்க்கும் தேசியுமோ? அது

தெரியாதார் குருவை நம்மவர் என்பர். தெரிந்தோர் 'குருவே சிவம்' என்று திருவடி பணிந்து பேரின்பம் எய்தும் புண்ணியராவர்.

"சுத்த சிவன் குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணு அதிமூடர்
பொய்த்தகு கண்ணுன் நமர்என்பர்; புண்ணியர்
அத்தன் இவன்என் றடிபணி வாரே". (1678)

2. குருவழிபாடே வழிபாட்டிற்கெல்லாம் முதன்மையானது. உயிர்கள் அடையும் இன்பத்துன்பங்களுக்கு வழிகள் எத்தனையோ இருக்கின்றன. அவ்வழிகளிற்படுவது வழிபாடாகாது. பேரின்பத்தை அடையத் தக்க வழியிற் படுவதே வழிபாடு. மருள்வழி அருள்வழி என்று இரு வழியே பெருவழி. மருள்வழி இன்பத்துன்பத்தை விளைக்கும் தீயவழி, அந்த இன்பம் சிற்றின்பம்; அழியும் இன்பம். அழியாத பேரின்பத்தை அளிக்கும் வழியே அருள்வழி. அந்த நல்வழியிற்படுதலே 'வழிபாடு' என்று தோன்று தோட்டு வழங்கி வருகிறது. மருள்வழியை 'ஐம்புலன்நெறி' என்பர். அருள்நெறியை 'மெய்யுணர்வுநெறி', 'ஞான மார்க்கம்' என்பர். "புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சி நல்கு"வது குருவழிபாடு ஒன்றே. "நிலை நிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்துகரணம் ஒரு நெறியே செல்லப், புலனெறி நீத்து அருள்வழி போய்ப் போதமாம் தன்வலியைப் போத்திநின்ற, மலவலிவிட்டகல அரா உமிழ்ந்த மதிபோல் விளங்கி மாறி ஆடும்தலைவன் அடிநிழல் பிரியாப் பேரின்பக் கதி" அடைதல் குரு வழிபாட்டால் அன்றி வேறு எதனுலும் கிடைக்காது. இதனைத் திருமூலர் அருளிய

"வருவழி போம்வழி மாயா வழியைக்
கருவிழி கண்டவர் காணு வழியைப்
பெருவழி யாய்நந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலும் ஆமே",

என்னும் திருமந்திரத்தால் அறியலாம்.

தோட்டால் வேற்றுமை அடைவிப்பது பரிசனவேதி எனப்படும். கண்டால் வேற்றுமை அடைவிப்பது தரிசன வேதி எனப்படும். குருவின் திருக்கையால் தோடப்பட்டவர் கட்டுநிலையின் நீங்கி, வீட்டு நிலையாம் வேற்றுமையை அடைவர். பரிசனவேதி பரிசித்ததெல்லாம் பொன்னாய்விடும். அதுபோலக் குருபரிசம் உற்ற உயிர் எல்லாம் திரிமலம் தீர்ந்து சிவமாய்விடும்.

" பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகுமாபோற்
குருபரிசித்த குவலயம் எல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவனவ னாமே". (திருமந்திரம்)

இதிற்' குவலயம்' என்றது 'உலகம்' என்னும் பொருட்டாய் உயிர்களைக் குறித்தது. அவ்வுயிருள்ளும் உயர்ந்தோரை உணர்த்திற்று. 'உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே' என்றது சேந்தன் திவாகரம்.

'நேயத்தே நின்றநிமலன்' 'நேயத்தே நிற்கும் நிமலன்' என்று எட்டும் பத்தும் ஆகிய திருமுறைகள் குருவையே கூறுவதன் கருத்து இங்கு நினைக்கத்தக்கது, நேயம் - அன்பு. அன்பினால்தான் குருவருளை அடையக்கூடும். 1. குருவின் திருமேனி தரிசனமும், 2, குருநாமோச்சாரணமும், 3. குருவாக்கிய சிரவணமும், 4. குருரூப த்யாநமும் அன்றி உள்ளத்திற்கு வேறு தெளிவு இல்லை. மற்றவை எல்லாம் கலக்கமே விளைப்பன. கலக்கம் நீங்கி உள்ளம் தெளிவு உறவேண்டின், அந்நான்குமே நமக்கு வேண்டும் அருள் ஒழுக்கம் ஆகும்.

ஆதலின், திருக்கயிலாய பரம்பரையில் விளங்கும் தருமையாதீனத்தில் 25 ஆவது பட்டத்தில் எழுந்தருளிச் சிவஞான பீடத்தை அணிசெய்து வீற்றிருக்கும் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்; சிவபூஜா பரம்பரைத் தோற்றம் உடையவர்கள். இளமை முதலாகச் சிவநெறியில்

வழுவாது திருமுறைப் பாராயணம் புரிபவர்கள். திருமுறைகளை உரையோடும் வெளியிடச்செய்தருள்பவர்கள். ஜபதபங்களைக் கடைப்பிடித்து ஸ்ரீ சொக்கநாதரை மிக்க பக்தி சிரத்தையோடும் வழிபட்டுவரும் அளவிலாத பெருமையுடையவர்கள். திருவருளே துணையாயும் வடிவாயும்கொண்டு திகழ்ந்து, அளவிடற்கு அரிய திருப்பணிகளையும் மகா கும்பாபிஷேகங்களையும் செய்வித்துவருபவர்கள்.

நற்பொழுது போக்கிற்கு லக்ஷம் கோடி அர்ச்சனைகளையும், வெற்றிக்குக் கொற்றவையையும், அருளுக்கு அபிராமியையும், செல்வத்திற்குச் செல்வமுத்துக்குமாரக்கடவுளையும், சிவஞானத்திற்குக் குருஞானசம்பந்தரையும், பேரின்பத்திற்குச் சொக்கேசனையும் வைப்புச் செல்வமாகக் கொண்டு நல்வாழ்வு நடாத்துபவர்கள். ஞானபரணமே பூண்டு முத்தி நிச்சயத்தில் உறுதி அருது சிவபோகசாரத்தை நுகர்பவர்கள். கேதார யாத்திரையில் அங்குள்ள புரோதாயம் என்னும் புனித தீர்த்தத்தில் ஆடி யின்புற்றவர்கள், 'உள்ளமலம் நீங்கி ஓங்கு சிவாநந்த வெள்ளம் திளைத்து அதுவாய்' மேவிய அநுபவத்தைத் திருக்கயிலையிலே உற்றுக் கௌரிகுண்டம், மானச சரோவரம் முதலிய அற்புத தீர்த்தங்களில் மூழ்கித் தெளிந்தவர்கள். 'பரானந்தமே கதியாகக்கொண்டு மற்றெல்லாம் துயிலிற் கனவு என மதியாதிரு'க்கும் மருந்தை எம்போல்வார் பிறவி நோய்க்கு அருளி வாழ்வித்து வாழ்பவர்கள். 'சொல்லும் பொருளும் இழந்து சுகானந்தத் தூக்கத்திலே அல்லும் பகலும் இருப்பது என்றோ கயிலாயத்தனே' என்ற பட்டினத்தார் வினவிற்குச் செயலால், இன்றே இருக்கக் கிடைத்தது என்று விடையிறுத்த வண்ணம் திருக்கயிலாயத்தைத் தரிசித்து, வந்து இனிது வாழ்கின்றவர்கள். அத்தகு திருவருட் சிறப்பு வாய்ந்த நம் கயிலைக் குருநாதர் அவர்களைச் சிறந்த முறையில் வழிபட விரும்பியது உலகம். அவ்வுலகம் எது? தமிழ் உள்ளம் படைத்தார் உள்ள எல்லா இடமும் அதுவே.

தமிழர், தமிழன்பர், தமிழ்ப் புலவர், தமிழ் நாவலர், தமிழ்ப் பாவலர், தமிழ் மக்கள், தமிழ்ச் செல்வர், தமிழ்ச்

சான்றோர், தமிழ் ஞானியர், வடமொழியில் வல்ல தமிழ் நெஞ்சினர் அனைவரும் இக் 'குருவழிபாடு' செய்ய முனைந்து கடைப்பிடித்து நிறைவுற்றுக் களிக்கின்றனர்.

குருவை முத்திறத்தில்வைத்து வழிபட்டனர் முன்னோர். நக்ஷத்திரம், சந்திரன். சூரியன் போல்வார் குருவாவார். கிருகத்தகுரு நக்ஷத்திரமும்; சந்யாசகுரு சந்திரனும், ஞான குரு சூரியனும் போல்வர்.

" தாரகைநேர் இற்குரவர் தண்மதிக்கு நேர்ஆகும்
காரகத்தை நீத்த கனகுரவர் — பாரகத்தில்
ஆர்க்கும் இருள்தீர்க்கும் ஆதவன்நேர் மையல்அறத்
தீர்க்கும் அருட்குருவாம் தேசு " (சிவாச்சிரமத்தெளிவு 65)

நம் கயிலைக் குருநாதர் சிவஞான குருபரம்பரையில் வந்த பெருமானுர். திருமேனியொளி முதலிய எல்லாத் திறத்திலும் சிவசூரியனுகத் திகழ்பவர்கள். அவர்களைக் குறித்தே இப்பாடலில் இவ்வுவமை அமைந்ததோ என்றும் எண்ணுகிறது உள்ளம்.

சூரியனை வழிபடுவார் சூரியனை ஒத்த நிறம் உடைய கனகத்தாலும் வழிபட ஆர்வம் மிக்குற்றனர். பொன்னுடைகளால் ஆயிரம் நன்மக்களைப் போர்த்து மகிழ்வித்தருளிய திருமேனியை அப்பொன்னுக்குள் ஒளிரவைத்துக் கண்ணுரக் கண்டு, கையாரத் தொழுது, நெஞ்சார நினைத்து, தலையார வணங்க விரும்பிய சான்றோர்களின் தவத்திற்கு ஓர் எல்லை உண்டோ ?

'பொன் மலர் நாற்றமுடைத்து' 'பொற்றாமரைக் குளம்' முதலிய பழந்தமிழ்ச் சொற்றொடர்கள் பொன்னுல் மலர் செய்யும் பழக்கம் உண்டு என்பதைக் குறிக்கும்.

உயர்வு முதலிய சிறப்புக்களைப் போற்றிப், 'பொன்னுலே பூஜிக்கவேண்டும்' என்னும் உலகவசநம் இன்றும் இருக்கிறது.

சிவபூஜை புரிவார் ஸ்வர்ணாபிஷேகம் புரிதல்வேண்டும். என்னும் விதியை அறிந்திருப்பர். ஸ்வர்ணத்தாலே வில்வம் செய்வித்துவைத்துக்கொண்டு வழிபட்டதும் உண்டு. வழிபடுவதும் உண்டு.

"கனகாபிஷேகம்' நம் பரதகண்டத்தில் பலர்க்கு நடத்திய உண்மை பெரியோர்களுக்குத் தெரியும்.

இத்தருமையாதீனத்தில் பத்தாவது பட்டத்தில் எழுந்தருளி விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர் அவர்களுக்கும், சாரங்கி வாசிக்க வல்லராய் இலங்கிய முனிவர் பிரானுக்கும், ஸ்ரீ சம்பந்தசரணாலயர்க்கும் 'கனகாபிஷேகம்' நிகழ்ந்திருக்கிறது. அருட்செல்வர் ஆகிய அப்பைய தீக்ஷிதர்க்கும் கனகாபிஷேகம் நிகழ்ந்தது.

'கனந்தந்தான் கனகாபிஷேகம் தந்தான்' என்று பாடிய தருமையாதீன வித்துவான் அருணாசலக்கவிராயர்க்கும் கனகாபிஷேகம் (பொன் குளிப்பு) வாய்த்தது.

பல்வேறு மலர்களால் வழிபட்டால் வழிபட்டவர்க்கு அவ்வம்மலர்க்குரிய பயனாக வெவ்வேறு கிடைக்கும் என்று அறிவித்த முன்னோர், கனக புஷ்பத்தால் செய்யும் வழிபாடு, இதர புஷ்பங்களால் எய்தும் பயனினும் பத்து மடங்கு மிகுதியாகப் பயன் விளைக்கும் என்று கூறினர்.

अलाभे तु स पुष्पाणां पत्राण्यपि निवेदयेत् ।
पत्राणामप्यलाभे तु तृणगुल्मौषधीरपि ॥
ओषधीनामलाभे तु भक्त्या भवति पूजनम् ।
यत् पुण्यं प्रतिपुष्पे तद्दशधा स्वर्णनिर्मिते ॥

யஜுர்வேத ஆந்ஹிக சூத்ரம்

புறமலர்களுள் எதனுல் வழிபட்டாலும் அகமலர்க்குள் அமையத்தக்க புத்தியையும் ஆன்ருேர் தெளிவுறச் சொல்லி யிருக்கின்றனர். மந்திரங்களில் அக்ஷரம் என்ற புத்தி கூடாது. தெய்வ விக்கிரஹங்களில் சிலா (கல்) என்ற புத்தி கூடாது. குருமணியிடத்து மனித தேகம் என்ற புத்தியே கூடாது. இவ்வாறு பரசிராமகற்ப சூத்திரம் கூறிற்று. இதன் கருத்து இதில் முற்கூறியவாறு 'சிவமே குரு' என்னும் சிந்தையுடன் வழிபடுதல் வேண்டும் என்பதே.

அரசர்க்குச் செய்யும் சிறப்பெல்லாம் குருநாதர்க்கும் உரியவை ஆகும் என்னும் ஆகம விதியை அவை மெய்ப் படுத்துகின்றன.

உலகில் உற்பாதங்கள் எல்லாம் ஒழிந்து நல்லவை நிலைபெற்று விளங்கவும், மக்கள் இனிது வாழவும் வேண்டி நல்ல வேளையில் கோயில், பூங்கா முதலிய தூய இடங்களுள் ஏதேனும் ஒன்றில் அணிபெறச்செய்து, பொன், வெள்ளி, பாலுடைய மரம் முதலியவற்றுள் ஒன்ருல் செய்யப்பெற்ற பீடத்தில் மலர்களைப் பரப்பியும் கனகத்தைப் பரப்பியும் வீற்றிருக்கச் செய்து, அமைச்சர், புரோகிதர், கணிதர் முதலோர் அரசனைச் சூழ்ந்து நிற்க 'ஹிரண்யவர்ணு' எனத் தொடங்கும் மந்திரம் முதலியவற்றைச் சொல்லிக் கனகாபிஷேகம் புரிதல்வேண்டும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு பரிவாரங்களும், அன்பர்களும், சீடர்களும், ஏனைய தூயோர்களும் சூழ்ந்து நிற்க கனகாபிஷேகம் நிகழ இருக்கிறது.

இக்கனகாபிஷேகத் திருவிழா என்றும் கிடைத்தற்கு அரிய பெருவிழா; எல்லார்க்கும் நிகழ்த்துவது அல்லாத ஞானவிழா. இது 12—3—61 ஆதிவாரத்தில் நடைபெறும். முன் இரண்டு நாளும் கூட மூன்று நாளும் இருந்து தருமை யின் பெருமையையும், குருபீடத்தின் மஹிமையையும்,

கயிலைக் குருமணியின் கருணை வெள்ளத்தையும், அன்பர்களையும், அவர்கள் செய்யும் வழிபாடுகளையும் கண்டு பிறவிப்பயனுகிய இன்ப வெள்ளத்தில் திளைத்தல்வேண்டும். இவ்வாறு எண்ணுத நெஞ்சம் கொஞ்சமும் இராது.

"முறைவானே இம்மூன்றும் முற்றிஅருள்
பதிந்துவினை ஒப்புவாய்ந்து
நிறைவாய பருவத்தின் உயிர்க்குயிராய்
நின்றருளும் யாமேதோன்றி
மறைவாய்மை நிருவாண விதியாற்ருல்
வழிஆறும் தூய்மைசெய்து
குறையாத பேரருளின் அறிவுறுக்கும்
அஞ்செழுத்து" வாழ்க.

வருக உலகம்; வாழ்க உயிர்கள்; வளர்க குருபக்தி.

தென்முகப் பரமன் துதி

சண்முகப்பிரியன்,
இரயில் நிலையத் தலைவர், மங்கைநல்லூர்,

இராகம்: அடாணு] [தாளம்: ஆதி

பல்லவி

தெற்கு முகம் பார்த்திருக்கும் தேவ குருநாதா — உன்
பொற்கோலத்தைப் போற்ற இங்கே சொற்களேது மேதா (தே)

அனுபல்லவி

கற்களின் மேலமர்ந்து கல்லால மரத்தடியே
சற்குணராம் நால்வருக்கு சதுர்மறை ஓத வந்த (தே)

சரணம்

மாநிலத்திலே சிறந்த மாயூரப் பதியினிலே
மன்னரென வீற்றிருந்து வள்ள லெனவே விளங்கும்
தேனிறைந்த காட்சிதனைத் தேவிட்டாமல் யாம் பருக
வானிறைந்த பொருளே இவ் வையகத்திற் கருளாயோ? (தே)

சிவ ஞான போதம்

கட்டுரை 26

சித்தாந்த சிரோமணி, சித்தாந்தரத்நாகரம்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி,

(மலர் 20, இதழ் 2, பக்கம் 146 இன் தொடர்பு)

எனதுடல் என்றலின் (தனுவினுள்) ஆன்மா உளது'. (பொழிப்புரை) 'என்பதி என்மனை என்றாற்போல என்கை என் கால் என நிற்பது உளது- ஆகலின், அதுவே அவ்வான் மாவாம் என்றது'.

அப்பொழிப்புரையின் விளக்கம்

(அகரம் முதலிய சூக்குமபஞ்சாக்கரரூபமாய் அறிந்து வந்ததோரறிவு உடம்பினுள் நிலைபெற்றுளது என்று முன்னை அதிகரணத்தில் அறியலாயிற்று) அவ்வறிவு உடம்பின் வேறாய் நிகழக் காண்கின்றோம். 'நான் நுணுகினேன்' 'நான் பருத்தேன்' எனச் சொல்லுகின்றார்கள். அந்நுண்மையும் பருமையும் உயிர்க்கு இல்லை, உடம்பிற்கே உள்ளன. அவ் வாறு சொல்வது உடம்பையே நான் என்று வழங்கும் உலகியலை அறிவிக்கின்றது. அறிவித்தும் தேகான்மவாதிகள் 'உடம்பே ஆன்மா' என்கின்றார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் இரண்டு. அவற்றுள்,

ஒன்று:- அவ்வறிவு உடம்பின்கண் அன்றி நிகழக் காணாமை.

மற்றொன்று:- 'நான் நுணுகினேன்' 'நான்பருத்தேன்' என உடம்பினையே நான் என்று வழங்கக் காண்டல்.

இவற்றுள், பின்னது ஒன்றுமட்டும் இங்கு மறுக்கப் பட்டது. படவே முன்னதும் மறுக்கப்பட்டதாகின்றது.

நான் பருத்தேன், 'நான் சிறுத்தேன்', 'நான் கரியேன்' 'நான்மானிடன்' நான் பார்ப்பான் என்பன உயிரைக் குறிப்பன அல்ல. உண்மையில் உயிருக்குப் பருமையும், சிறுமையும், கருமையும், மானிடமும், பார்ப்பனச்சாதியும் ஆகிய பண்புகள் உரியன அல்ல. உடலுக்கே அவை ஏற்றன, அச் சிறந்த பண்புகள் உபசாரத்தால் உயிர்க்கு ஏற்றி வழங்கப்படுகின்றன. யான் உடம்பு என்றும் யான் கை என்றும் யான்கால் என்றும் உடம்பை வழங்குவர் சிலர். 'எனதுடம்பு' 'எனதுகை' எனது கால்' என்றே வழங்குகின்றனர். அவ் வழக்கத்தால் உடம்பு எனது ஆமே அன்றி யான் உடம்பு ஆகேன். கை எனது ஆமே அன்றி. யான் கை ஆகேன். கால் எனது ஆமே அன்றி யான் கால் ஆகேன். இவ்வாறு யான் வேறு உடம்பு வேறு. யான் வேறு கைகால் முதலிய உறுப்புக்கள் வேறு என்னும் வேறு பாடு தோன்றவே யாவரும் வழங்குகின்றனர். அவ்வழக்கமே உடலின் வேருய் உயிர் உண்டு என்னும் உண்மையை அறி வுறுக்கும். இம்மறுப்பு அவன் வழங்கும் வழக்கைக்கொண்டே அவன் கூற்றை மறுத்தவாறும்:

'எனது நூல்' என்று பொருளேயும் 'எனது வீடு' என்று இடத்தையும் 'எனது நாள் திருவோணம்' என்று காலத்தை யும் குறிக்கும் இடத்தில், நூல், வீடு, நாள் மூன்றும் எனக்கு வேருவனவே அன்றி யான் ஆவன அல்ல. அதனுல் எனக்கும் அவற்றிற்கும் உள்ள கிழமை (உரிமை) தற்கிழமை அன்று, பிறிதின்கிழமையே, 'எனதுடல்' என்றதும் பிறிதின் கிழமைதான். 'உடலது பகுதி' என்ருல் உடலும் அதன் பகுதியும் வேவ்வேறல்ல. அப்பகுதியும் சேர்ந்ததே உடல். அதனுல், அவ் 'வுடலது பகுதி' என்றது தற்கிழமை. கையது விரல், விரலது நுனி, மரத்தது கிளே என்ருற் போல்வன எல்லாம் தற்கிழமையே. இவை உறுப்பைப் பற்றியவை. உறுப்பு சினே, 'உடலது கருமை' பண்பு (குணம்). 'உடலது

வளைவு' தொழில், நெல்லினது பொரி, மஞ்சளது பொடி, படையது திரட்சி, நெல்லது குவியல் என்றாற் போல்வனவும் தற்கிழமையே.

'எனதுடல்' என்றது உயிர்க்குப் பிறிதாகிய உடலைக் குறித்தலால் பிறிதின்கிழமையே.

தலைமட்டுமாக இருக்கும் இராகுவை 'இராகுவினதுதலை' என்று வழங்குமாறு போல 'எனதுடல்' என்பது அபேதம் பற்றிய வழக்கு என்றும் அதனால் அஃது அவ்வழக்காய் அமையும் என்றும் சொல்வர் தேகான்மவாதிகள். அதன் மறுப்பே'என்பதி' 'என்மனை' என்றாற்போல 'என்கை'என்கால் என நிற்பதுளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

'இராகுவினது தலை' என்றாற்போல்வன சிறுபான்மை வழக்கம் ஆம். ஆகலின், ஆண்டு ஒற்றுமை (அபேத) ப் பொருள் கொள்ளுதல் அமையும், ஈண்டு அவ்வாறு அன்று. 'என்பதி' 'என்மனைவி' 'என்பொருள்' என்று வழங்குமாறு போல 'என்கை' 'என்கால்' 'என்கண்' 'என் செவி' 'என் பொறி' 'என் உயிர் (பிராணன்)' 'என் அறிவு' எனப் பல வாற்றாலும் பெரும்பாலும் உலகத்து வழங்கக் காண்கிறோம். காண்டலின், இவ்வழக்கத்தின் மிகுதிப்பாடு பிறிதின் கிழமைப் பொருட்கண் அன்றி வாராமையால், அங்கனம் கூறிக்கொண்டு நிற்கின்ற பொருள் வேறு ஒன்று உண்டு என்பது ஏற்படும். படுதலின், அதுவே மேல் உரையளவை (ஆகமப்ரமாணம்) பற்றிச்சாதித்த ஆன்மா.

'எனதென்ற மாட்டின் எனதலா தென்னு
துனதலா துன்கைகால் யாக்கை-எனதென்றும்
என்னறிவ தென்றும் உரைத்து நீ நிற்றிகாண்
உன்னில் அவை வேறாம் உணர்,'

வினா :- 'என்பதி' 'என்மனைவி' என்பன முதலியவை பிறிதின் கிழமைப் பொருளன. அப் பொருள்கள் தம்மின் வேறாதல் கண்டு அப் பிறிதின் கிழமைப் பொருள்பட எனது என்றல்போலக் கை, கால் முதலியவற்றைத் தற்கிழமைப்

பொருள்பட எனது என்று கூறி நிற்றலின், அவ்விரு வேறு மொழியும் தம்முள் ஒக்குமாறு எப்படி?

விடை :- உலகாயதநூல் கேட்கு முன்னெல்லாம் பதி, மனைவி முதலிய புறப்பொருளையே உயிரெனக் கொண்டு மயங்கி நின்றாய். அக் காலத்தில் அவற்றை எனது அன்று எனது அன்று என வேறு காணாது தனித்தனி எனது என்றே தற்கிழமைப் பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாய். அது போல, உனது அல்லாத உன் கை, கால், உடம்புகளைத் தனித்தனி எனது என்றும் அங்கனம் அறிந்த பாச ஞானத்தை என் அறிவு என்றும் தற்கிழமைப் பொருளவாகக் கூறிக் கொண்டு நீ (ஒரு பொருள்) வேறு நிற்கின்றாய்.

உலகாயத நூலை ஆராய்ந்த பின்னர், அப்பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேருதல் கண்டாற்போல, உன் கை, கால் முதலியவற்றின இயல்புகளையும் ஏதுக்கள் முதலியவற்றால் ஆராய்ந்து பார்த்தாயானால், அக் கை கால் முதலியவை உனக்கு வேறாகும். அதனை அறிவாயாக.

இவ்வெண்பாவில் 'எனதென்றமாட்டின்' என்னும் தொடர்க்கு எவ்வுரையிலும் தொடர்ப்பொருத்தம் உற்ற பொருள் காணப்பட்டிலது. 'மாட்டின்' என்றதற்குச் சிவஞான முனிவரும் எக்குறிப்பும் எழுதவில்லை. அவருரையில் 'இன் உவமவுருபு' என்றுள்ளதால், மாடு - செல்வம் என்றதாகக் கருதி எனது மாடு எனல் வேண்டும். 'எனதென்ற மாட்டின்'- (நீ உலகாயத நூல் கேட்கு முன்னெல்லாம் பதி மனைவி முதலிய புறப்பொருளையே உயிரெனக் கொண்டு மயங்கி நின்றாய் அன்றே, அக்காலத்து அவற்றை எனது அன்று என வேறு காணாது தனித்தனி) எனது என்றே தற்கிழமைப் பொருளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல" என்னும் அவர் உரையில் அதற்குள்ள பொருத்தம் ஆராயத்தக்கது.

'உனதலா வுன் கை கால் ஆக்கை' 'நிற்றியால் உன்னில்' என்று பாண்டிப்பெருமாளுரையில் உள்ள பாடம் கொள்ளற்பாலனவே. (தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின்

அருளுரை

இன்று ஒரு நல்ல நாள். எத்தனையோ நல்ல நாட்கள் வருகின்றன. இன்று சிறப்பான நல்ல நாள். அந்த நல்ல நாள் இன்று உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. கிடைத்தற்கரிய பெரும் பேருக இது உங்களுக்கு அமைந்திருக்கிறது. நாள்தோறும் வருகின்ற நாட்களைவிட இன்று என்ன ஏற்றமிருக்கிறது என்ருல் நேற்று ஏகாதசி; சுவாமிகளின் மௌன விரத நாள். இன்று துவாதசி; அது பூர்த்தியாகிப் பாரணை பண்ணும் நாள். மௌனமாக இருந்து பின் ஆசி சொல்லும் நாள்தான் மிகச் சிறந்த நாள். அது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. சுவாமிகளுடைய உபதேசம், தரிசனம் முதலியவற்றைத் தென்னுட்டு மக்களெல்லாம் நன்ருக நிறையப் பெற்றிருக்கிருர்கள். ஓர் ஆண்டு அல்ல; ஈராண்டு அல்ல; ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக அவர்களுடைய ஆசியையும், தீட்சையையும், கடைக்கண் நோக்கையும் பெற்று வருகின்ருர்கள்.

மாயூரம் மக்கள் எப்போழுதும் அதிர்ஷ்டசாலிகள். ஆயிரம் ஆனுலும் மாயூரம் ஆகாது என்று அடிக்கடி நாம் சொல்லுவதுண்டல்லவா? அதனை உண்மையேன்று இன்று காட்டிவிட்டீர்கள். சுவாமிகள் இங்கு வருவதற்குத் துணைக்கருவியாக நின்றவர் மாயூரம் ஆவணப் பதிவாளர் சிவநேசச்சேல்வர், நம் அன்பர் திரு. இராமநாத ஐயர். அவருக்குச் சுவாமிகளின் ஆசி என்றும் உண்டு. மாயூரம் மக்கள் முதற்கண் அவருக்கு நன்றிதேரிவிக்கக் கடமைப்பிட்டவர்கள். சுவாமிகளை நீங்கள் எல்லாம் தரிசிக்கச்சேய்த அவருக்கு நமது ஆசி.

ஔவையார் நம் தமிழ் முதாட்டி. அவள் கூறுகிருள் "நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நல்லார்சோற் கேட்பதுவும் நன்றே; நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு

தருமையாதீனத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் வரவேற்பின்போது வழங்கியருளியது.

இணங்கி இருப்பதுவும் நன்று '' என்று. இப்பாடலின் உண்மைப் பொருளை இன்று நீங்கள் உணர்கின்றீர்கள்.

சுவாமிகள் சிவனடி மறவாச் சிந்தை உடையவர்கள். சமயப் புரட்சிவீரர். வடமொழிக் கடல். சிறந்த சமயத் தொண்டர்களை உருவாக்குபவர். காஞ்சிபுரத்திலே அவர்கள் பேசிய பேச்சு நமக்கு நினைவு வருகிறது. '' மடங்கள் போன்ற அறநிலையங்களில் சில வருவாய்க் குறையுடையனவாய் இருக்கின்றன. அங்கே ஊழியம் செய்பவர்கள் அரைச்சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்பவர்களும், உண்மையாக வேலை செய்பவர்களும், சிரமதானம் செய்பவர்களும் ஆகஇருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் அடிப்படையாகப் பக்தி இருக்கவேண்டும் பக்தி இல்லாத தொண்டு பயனளிக்காது. மக்களுக்கு உண்மையான ஆஸ்திக பக்தி வளரவேண்டும் ; குறிக்கோள் மறக்கலாகாது '' என்று அன்று அவர்கள் பேசிய பேச்சு தொண்டர்களுக்குச் சிறந்த அறிவுரையாகும். ஆசாரியன் அருகில் இருப்பவர்களைவிடத் தொலைவில் இருப்பவர்கள்தான் உண்மையான பக்தியோடு இருப்பார்கள். சுவாமிகளின் அணுக்கத் தொண்டர்களும் சிறந்த பக்தியுள்ள சிறப்புடையவர்கள்.

சுவாமிகள் நல்ல நினைவாற்றல் உடையவர்கள். 1952-ம் ஆண்டுதான் நாம் குருமூர்த்தி சந்நிதியிலே இவர்களை முதன் முதல் சந்தித்தோம். பல மணிநேரம் உரையாடினோம். அணுக்கத் தொண்டர்கள் எல்லோரையும் அகற்றிவிட்டு நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம். இவர்களின் இதயத்தை நாம் அப்பொழுது உள்ளவாறு அறியமுடிந்தது. இவர்கள் இடைவிடாத கடவுட்சிந்தனை உடையவர்கள். இப்பொழுது இங்கே வீற்றிருக்கின்றபோதெல்லாம் இவர்கள் மனம் காமாட்சியின் திருவடிகளை வருடிக்கொண்டிருக்கும். முகமன்உரையோ, போலிப் பாராட்டுரையோ அன்று இது. அவ்வாறு நாமும் சொல்லத் துணியோம். நம் நாவும் சொல்ல எழாது.

ஆண்டவன் அருள் இல்லையானால் அறிவு விளக்கம் உண்டாகாது. எதுவும் பிரகாசிக்காது. சுவாமிகள் ஆண்டவன் அருளைத் தேக்கித் தேக்கி அவ்வருட் பிரகாசம் நிரம்பப் பெற்றிருப்பதால் அவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம்விளக்கம் அடைகின்றன. இது எதைக் காட்டுகிறது ? கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல். '' கற்றதனால் ஆய பயன் என்கொல்

வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்'' என்பது திருக்குறள். குமரகுருபரரும் ''சொல் விற்பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல நல்வித்தையும் தந்து'' என்று சகல கலாவல்லிமாலையில் பாடுகிறார். இங்கு 'நல்வித்தை' என அடைமொழி கொடுத்துக் கூறியுள்ளமையை ஊன்றி உணர்தல் வேண்டும். கல்வியின்பயனாகத் திருவருளை மறவாத வித்தையே நல்வித்தை அல்லவா? திருஞானசம்பந்தர்,

''கற்கஇடர்ப்பட்டு மிகக் கற்ற தெல்லாம் கற்றவர்பால்
தர்க்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையார்க்கு ஆளாகி
உள்ளம் அடங்க அல்லவோ''

என்று கூறுகின்றார்கள். கற்ற கல்வியின் பயனாகச் சுவாமிகள் உள்ளம் அடங்கிய சிறப்புடையவர்கள்.

காஞ்சி காமகோடி பீடத்திற்கு, யாரும் செய்யமுடியாத-நினைக்கமுடியாத சிறப்புஒன்றை இவர்கள் செய்திருக்கின்றார்கள். ஒரு ஸ்தாபனம் சிறந்த முறையிலே நடைபெறவேண்டும் என்ற ஆர்வம் அதனை நிர்வாகம்செய்கின்றவர்களுக்கு இருப்பது அவசியம். தன் காலத்திற்குப் பிறகு இந்த ஸ்தாபனம் நன்றாகச் செம்மையாக நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தால் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு நல்ல அனுபவமும் உண்டாக்குதல் கடமைகளில் முதற்கடமை. இவ்வாறு நம் சுவாமிகள் உண்டாக்கிவருவது பாராட்டத்தக்க ஒன்று. இச் செயல் இவர்களுக்கு ஸ்தாபனத்தின் மேலுள்ள பொறுப்பையும், அன்பையும் காட்டுகிறது. தமக்குப் பிற்றோன்றலாக ஒருவரை நியமித்து அவருக்குப் புதுப்பெரியவாள் என்ற பெயரையும் சூட்டியுள்ளார்கள். தம்முடைய சீடரை மதிக்கின்ற மதிப்பும் இதில் தெரிகிறது அல்லவா? திருநாவுக்கரசு சுவாமிகள்,

''எவரேனும் தாமாக இலாடத்திட்ட
திருநீறும் சாதனமும் கண்டாலுள்கி.........
இவர் தேவர் அவர்தேவர் என்று சொல்லி இரண்டாட்டா
ஈசன் திறமே பேணி'' [தொழிந்து

என்று கூறுகின்றார்கள். அடியார்களில் பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடு கிடையாது என்பதை இதன்மூலம் எடுத்துக் காட்டினார்கள். ஆசாரியனுடைய அனுக்கிரகம் இருந்தால் அதுவே போதுமானது என்ற எண்ணம் சீடனுக்கு என்றும் வேண்டும். அதுவே சீடனுக்கு நற்பயன் உண்டாக்கும்.

1952 ஆம் ஆண்டு இதே மேடையில் P. T. ராஜன், T.L. வேங்கட்டராம ஐயர் முதலியோருடன் சுவாமிகளும், நாமும் இங்கே ஒன்ருய் வீற்றிருந்தோம். அன்று P. T. ராஜன் வட பழநியில் சுவாமிகளைப் பல ஆண்டுகளுக்கு முன்னுல் சந்தித்த தாக நினைவு என்று சொன்னுர்கள். சுவாமிகள் ஒரு வெள்ளித் தாம்பாளம் ஞாபகம் வருகிறதா என்று கேட்டார்கள். அப்படி அவர்களுக்கு ஞாபகசக்தி மிகவும்அதிகம். இவர்கள் செய்துள்ள அறப்பணிகள் பலவற்றை விவரித்தலுக்கு இப்போது நேரம் இல்லை. வள்ளலார்கோயில் தக்ஷிணுமூர்த்திக்குக் கோடியர்ச்சனை விழாவில் 1500 ருபாய் திட்டத்தில் தனி அர்ச்சனையும், பெருமா னுக்குத் தங்கத்தால் இரண்டு திருவடிகளையும் செய்து வழங்கி யுள்ளார்கள். மகான்களாயிருந்தாலும் ஆண்டவனிடத்திலே அன்பு வேண்டும் என்பதை இதன்மூலம் காட்டியுள்ளார்கள்.

ஊமையாக இருந்தாலும் வறுமையினுல் துன்பப்படும் பரம தரித்திரனுக இருந்தாலும் காமாட்சியை ஒரு கணப்போது நினைப்பவன் உலகத்தில் சிறந்த கீர்த்திமானுக ஆவான் என்று மூகபஞ்சசதியிலே ஒரு சுலோகத்திலே சொல்லப்பட்டிருக் கிறது. நம் சுவாமிகள் திருவருளைத் தேக்கிவைத்திருந்து உபதேசம் செய்பவர்கள். காமாட்சியின் நல்லருளைப் பெற்ற வர்கள். நினைத்தோறும், காண்டோறும், பேசுந்தோறும் எப் போதும் காமாட்சியின் திருவடிகளைத் தியானித்துவரும் அருள் நலம் உடையவர்கள். ஆதலின் அவர்களைத் தரிசனம் செய்தால் உங்களுக்கும் காமாட்சியின் அருள் கிட்டும் என்பது உறுதி.

அவர்கள் வருகை புரிந்துள்ள இந்த நல்ல நாளே நல்ல நாள். அவர்கள் கூறும் அருள் மொழியைக்கேட்டு அன்பர்கள் அனைவரும் உய்வார்களாக.

அவர்களுக்குக் குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகத் தலைவர் சைவத்திருவாளர். பி. திருஞானம்பிள்ளையவர்களால் ஒரு வரவேற்புப்பத்திரமும், ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் ஒரு வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பெறும்.

"அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம் வந் தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன் வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலியானை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே"

நமப்பார்வதீ பதயே! ஹரஹர மகாதேவா!

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்களின்

பொன்மொழி*

கயிலாயபரம்பரை என்று இதுவரைக்கும் ஐதீகத்திலும் பேயரளவிலும் இருந்துவந்ததை நிருபித்துக்காட்டும் வகையில் இவர்கள்செய்த மகாகயிலாயயாத்திரை அமைந்தது. இதுவரை ஏழைகளும் பைராகிகளும்தான் கயிலாய யாத்திரைக்குப் போவது வழக்கமாயிருந்தது. அதைப் பெருமளவில் மாற்றி இவர்கள் மகாகயிலாய யாத்திரை, அமரநாதயாத்திரை, பசுபதி நாதயாத்திரை முதலிய பெரிய யாத்திரைகளைச் செய்து உலகிற்கே வழிகாட்டியிருக்கிருர்கள். முதன்முதலில் நம் நாட்டி லிருந்து மைசூர் சமஸ்தானம் மகாராஜாதான லௌகிகமான முறையில் கயிலாய யாத்திரைக்குப் போய்வந்தார்கள். பெரிய ஆதீனத் தலைவர்களாயிருப்பவர்கள் இதுவரை யாருமே போய் வந்ததில்லை. மற்றவர்கள் லௌகிகமாகப் போய்வந்ததைவிட ஒரு ஆதீனத்தலைவர் யாத்திரை செய்ததைப் பாராட்டவேண்டும். கயிலாய பரம்பரையை நிரூபித்து இந்திய நாட்டின் வட கோடிக்கும் தென்கோடியானகாவிரி, தாமிரபரணி தீரங்களுக்கும் பெரிய புண்ணிய ஒற்றுமையை ஏற்படுத்தி யிருக்கிருர்கள்.

வடநாடு தென்னுடு என்ற பிரிவினை உணர்ச்சி சமய நெறியில் கிடையாது. வடநாட்டில் காஷ்மீரத்தில்தான் சைவம் ஓங்கியிருக்கிது. காஷ்மீரம், நேபாளம் இவை எல்லாவற்றின் குறிக்கோளாக வடக்கே மகாகயிலாயம் விளங்குகிறது. அருள் சம்பந்தமான தொண்டுகளே நாட்டை ஒன்றுபடுத்துவன. லௌகிகமான தொண்டுகள் பிரிவினைக்குக் காரணமாயிருப்பன. அருள் சம்பந்தமான தொண்டே நம்மை நல்வழிக்குக் கொண்டு செல்லும்.

இவர்கள்செய்த யாத்திரையில் துவாதச ஜோதிர்லிங்க யாத்திரையும் மிகச் சிறந்தது. இந்தத்தலச்சிறப்புக்களை எழுதச் செய்து நூலாகவும் வெளியிட்டிருக்கிருர்கள். ஆதிசங்கரர்

---

* ஒலிப்பதிவிலிருந்து பெயர்த்தெழுதியது.

மூன்று சுலோகங்களில் துவாதச ஜோதிர்லிங்கங்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள். ஒருஸ்லோகத்தில் நான்கு வரிகள். ஒருவரிக்கு ஒரு ஜோதிர்லிங்கம். மேலும் ஒருஸ்லோகத்தில் ஒரு ஜோதிர்லிங்கமாகப் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களையும் பாடியிருக்கிறார்கள்.

வங்காளத்திலே தக்ஷிணேஸ்வரம், இராமகிருஷ்ண ஆசிரமம், கல்கத்தா முதலிய இடங்களில் காளிக்கு இரண்டு பக்கங்களிலும் ஆறு ஆறு ஜோதிர்லிங்கங்களாகப் பிரதிஷ்டை செய்கிறார்கள். இப்படி இராமர் கோயிலாயிருந்தாலும் சரி, கிருஷ்ணன் கோயிலாக இருந்தாலும் சரி ஜோதிர்லிங்கப் பிரதிஷ்டை இல்லாமல் இல்லை. இமய முதல் கன்யாகுமரி வரை ஒரே நாடு என்ற அடிப்படையில் ஜோதிர்லிங்கங்கள் அமைந்துள்ளன. நம் நாட்டில் பல்லவர் கோயிலான காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் த்வாதச ஜோதிர்லிங்கங்கள் இருக்கின்றன. ஸ்ரீசைலம், இராமேஸ்வரம் முதலிய இடங்கள் தென்னாட்டின் ஜோதிர்லிங்க ஸ்தலங்கள். இப்படி நம்நாடு முழுவதும் ஈஸ்வரனுடைய ஒரே நாடாக விளங்குகிறது.

மகா கயிலாய யாத்திரை சென்ற நினைவாக இவர்கள் எழுப்பிய ஞாபகார்த்த வளைவுகள் மகாகயிலாய நிலையம் முதலியவற்றைப் பார்த்தேன். நாள்தோறும் கயிலாய நிலையத்தில் திருக்கயிலாயத் தேவாரத் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்து வருகிறார்கள் என்பதைக் கேட்க மிக்க சந்தோஷம்.

நான் இவர்களைப் போல மகாகயிலாயம் வரை செல்லவில்லை. 'நடந்தும் பல்லக்கிலுமாகப் பல தலங்களைத் தரிசித்துள்ளேன். அதுவும் பூர்த்தியாகவில்லை, இவர்கள் செய்த சிறந்த சிவபுண்ணிய யாத்திரையினால் நமக்கு ஏற்பட்ட ஒரு ஆனந்தம் பெருமிதம் இவைகளைச் சொல்லாமலிருக்கக்கூடாது. சிவபுண்ணியமான இந்த செயலைச் சொல்லாமலிருப்பது குற்றமாகும். சொன்னால் நமக்கும் சிறந்த சிவபுண்ணியம் உண்டாகும். இவர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் சொல்வது கடமையாகும். இதனால் சித்தாந்தம், வேதாந்தம் முதலிய சமய நெறிகளெல்லாம் செழித்தோங்கி நம் நாடு சிறந்து

விளங்கிச் செழித்து ஈஸ்வரனுடைய அருளைப்பெற்று எல்லா வற்ருலும் ஓங்கி விளங்குவதாக.

“ காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே ”

என்று எல்லோரும் ஒன்ருகத் திருவருளைப் பெற்று ஓங்க வேண்டும். பல மூர்த்திகளுக்குச் சுவர்ண கவசங்களும், கோடி அர்ச்சனைகளும் செய்துள்ளார்கள். சைவ சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டுகள் பல சிறப்பாகச் செய்துள்ளார்கள். இந் நற்பணிகளின் எதிரொலியே “கனகாபிஷேகமாக” அமைந்துள்ளது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Amirthagateswaraswamy Devasthanam,
Tirukkadayur.

I had the very good fortune to have dharshan in this holy shrine expecially on a very auspiciousday-"Thai" Friday. The temple is very well kept as is the case in every temple maintained by the Dharmapuram Mutt. The Sandhanakkappu for Abirami is splendid and soul inspiring.

(Sd.)
Dt. Judge, East Tanjore
10—2—61

*ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்

ஞான ஒளிவீசும் நன்மணியே!

தென்குமரி முதல் வடஇமயம் வரை தீந்தமிழும் சிவ ஞானமும் பரவும் வண்ணம் ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகளை அளித்தருளிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் முதலிய சான்றோர் தோன்றிய ஞான பரம்பரையிலே, பொன்னித்தாய் தன் அலைக்கரத்தால் கரை தொட்டு வணங்கிச் செல்லும் படியான தருமையம் பதியிலே, சிவஞான வள்ளலாய்த் தவராசச் செல்வராய்ப் புவி போற்றும் புகழாராய்ச் செவியினிக்கும் சொல்லராய் அருள் திருமேனியராய்த் திகழும் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களின் திருவடி மலர்களை முடிமீது சூடி வணங்குகின்றோம்.

கல்விப் பயிர்வளர்க்கும் கார்முகிலே!

சிவஞானக்கடலில் தெளிநீர் உண்டு உவட்டெடுத்துத் திருநீற்றின் ஒளியால் மின்னித் திகழ்ந்து, பக்தியைப் பெருக்கிப் பாசத்தை வென்று சாத்திரம் கற்றுத் தோத்திரம் பாடி இதயம் இளக்கித் தெய்வீகம் துளக்கிச் சைவப் பயிரை வளர்ப்பது போலவே, உலகியற் கல்வியையும் ஓம்புவான் வேண்டிக் கருணை மழை பொழியும் கார்முகிலே! பல்கலைக் கல்லூரியும் உயர்நிலைப் பள்ளியும் உவகையுடன் நடத்திப் பரிபாலித்து வரும் பண்பாளரே! இவ்வூராரும் உய்திபெறும் பொருட்டு இங்குத் தொடங்கவிருக்கும் உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்துக்கு அடிப்படைக்கல் நாட்டியருளும் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களின் திருவடிமலர்களைப் போற்றிப் புகழ்கிறோம்.

---

* திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சார்வரி ஆண்டு தைத் திங்கள் 16 ஆம் நாள் (29—1—61) ஞாயிற்றுக்கிழமையன்று திருப்பனந்தாளுக்கு எழுந்தருளி ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் அடிப்படைக்கல் நாட்டியருளிய ஞான்று வாசித்தளித்த வரவேற்புரைகள்.

பக்திரசங் கூட்டும் பைங்கரும்பே !

இமயமால் வரை பேற்ற கூந்தற்பிடி வேட்கும் முக்கட் கரும்பின் சுவை கண்டு பக்திப் பரவசராய்த் தேவாரம் பாடிய மூவர் முதலிகளின் பாசுரங்களை நூல் வடிவமாக வெளியீடு செய்து வழங்கியதோடு, அப் பாசுரங்களை இசைத் தட்டுகளிலும் வெளியீடு செய்தருளிய பரமகுருவே ! அருள்ஞான வள்ளல் ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகளின் திருமரபிலே வந்த ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நடத்தப்பெற்று வரும் பனசை உயர் தோடக்கப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களாகிய அடியோங்கள் ஸ்ரீ ல ஸ்ரீ கயிலை மகா சந்நிதானம் அவர்களின் திருவடி மலர்க்கண் தாழ்ந்து பணிகின்றோம்.

சேந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்.

மதுரகவி, தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

தலையே நீ வணங்காய் —
தவ மாமுனி தம்மவர்க்கும்
தலையா யுந்நமை ஆளுந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ —
கன கயிலை மலையைநண்ணிக்
கண்ணால் கண்டு மகிழ்ந்துவந் துற்றுரைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ —
திரு எம்பாவைப் பாடல்களைப்
புவியோர் கேட்கப் பதித்தளித் தான்திறம்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய்—
மூது மாமறை யின்முடியார்
ஆக்கைக் கேமலர் அர்ச்சிக்கும் அண்ணலை
மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் —
மதி சூடியை உள்நினைந்து
வாயால் ஐந்தெழுத் தோதும் புனிதனை
வாயே வாழ்த்துகண்டாய். 5

நெஞ்சே நீநினையாய் —
நிமிர் வெள்ளத்தால் நொந்தவர்க்கே
அஞ்சேல் என்றுஞ ஆடை அளித்தானை
நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர் —
கழல் சூடித் தொழுமவர்க்கே
கையால் அள்ளிக் கனகஞ் சொரிவானைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பணிமின் —
அருள் நந்தியைக் கண்மணியா
ஆக்கிக் கொண்ட அருந்தவ ராசனை
ஆக்கை யாற்பணிமின். 8

கால்காள் வலம் வருவீர் —
கயிலாயம் வலம் வந்த
சால்புடை யான்திருத் தரும புரத்தினைக்
கால்காள் வலம்வருவீர். 9

உற்றார் வேறுளரோ? —
உயர்ஞானம் ஒளிர்கயிலைச்
சுப்பிர மணியசு வாமியல் லால்நமக்
குற்றார் வேறுளரோ? 10

தேடிக் கண்டுகொண்டேன் —
திரு வைந்தெழுத் துட்பொருளை
நாடித் தந்தருள் நல்ல குருவினைத்
தேடிக் கண்டுகொண்டேன். 11

மட்டியூர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் அளித்தது:

மருதம் வீற்றிருந்து பெருவளஞ் சுரக்கும் தருமையம்பதி வாழ் சற்குருநாத!

தங்களின் அருள் வருகையை அகம்மகிழ வணங்கி வருக! வருக !! என வரவேற்கின்றோம். தங்களைத் தரிசிக்கும் பேறும் தங்களின் அருளுரைகளைச் செவி மடுக்கும் பேறும் இன்று கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றோம்.

நூன்முறை பயின்ற நுண்மைசால் அறிஞ !

தாங்கள் அருளி வரும் அருட்கொடையும், பொருட் கொடையும் அளவில்லாதனவாகும். மட்டியூரினருக்கும், குருவாடியினருக்கும் கல்வி பயில இடம் அளித்தருளியதைப் போலவே, அவ்விருவூருக்கும் நடுநாயகமாக விளங்கும் இத் திருப்பனசை நகரினருக்கும் உயர்நிலைப் பள்ளி தோற்றுவிக்க இடம் அளித்தருளியுள்ளீர்கள். தங்களின் அருட் கொடையால் பயிலுமிடமும் பனசைத் திருமடத்து அதிபர் ஸ்ரீல ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின் அருட் கொடையால் பொருளும் பெறறு இமயம் முதல் குமரி வரை தமிழ் மணமும், தெய்வ மணமும் கமழ்ந்திடப் புரிந்து வருகின்றன வென்றால் அது மிகை யாகாது. தங்களிருவரின் திருவருளால் அறிவு நலமும் ஆன்ம நலமும் பெற்று வாழும் எங்களுடைய பணிவையும், நன்றி யையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அல்ஹாஜி M. K. D. ஜலால்தீன் சாஹிபு அவர்கள் அளித்தது.

தருமையம்பதி வாழ் பெருமைகொள் மணியே !

தங்களின் இன்பவருகை கண்டு ஈடில்லா மகிழ்ச்சி கொள்கிறேன். தங்களைப் பன்முறையும் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பினும் எங்களூருக்குத் தாங்கள் வருகை தர; அப்பேற்றினைக் கண்டு வரவேற்கும்பேறு இன்றே கிடைத் திருக்கின்றது. இந்நாளை ஒரு பொன்னாளாகக் கருதி வருக ! வருக !! என வரவேற்கின்றேன்.

கயிலை மலைகண்டு கவினுற்ற பெருந்தகையீர் !

தங்களின் அருளாசிபெற்றே எளியேனும் மக்காவின் புனித யாத்திரையை முடித்து வந்தேன். தாங்களும் மேய் வருத்தம் பாராது கயிலைகண்டு தரிசித்து இன்புற்றீர்கள். மக்காவின் புனித தரிசனத்துடன்; கயிலைத்தரிசனமும்; தங்களின் திரு வுருவத்தைக் காணுற்ற பாக்கியத்தால் கிட்டுகின்றது என்பதை நினையும் தோறும் நினையும் தோறும் பெரு மகிழ்ச்சி யடைகின்றேன். சமய வாழ்வில் திளைத்து நிற்கும் ஒருவனுக்கு இதனைவிடப் பேறற்கரியதொன்று இல்லையேன்று எண்ணி இறும்பூது அடைகிறேன்.

செயற்கரிய செய்த செம்மை நலம் உடையீர் !

தாங்களும்; பனசைத் திருமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும் ஆற்றிவரும் அருந்தொண்டுகள் அளவில்லாதன. பனசைத் திருமடத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் எங்களுடைய மதத்தில் பெருநோம்புகளாகக் கருதி நோற்றுவரும் முப்பது நோம்புகளுள் ஒரு நோம்பிற்குக் கஞ்சி வார்த்து ஆதரவளித்து வருகிறார்கள். அவர்களின் சமயப் போது நலமும் அறப்பணிகளும் எளியேனுல் என்றும் மறக்க இயலாதன வாகும். தாங்களும் அவர்களும் இந்நிலத்தில் எழுந்தருளியதே பெரும் புண்ணியமாகும். இத்தகைய புனிதத் தால் எல்லா நலன்களும் எய்தி யாவரும் இன்புற எல்லாம் வல்ல ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்கு

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம்

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள்

(12—2—61 அன்று) எழுந்தருளியபோது

ஆதீனக் கல்விநிலையங்களின் சார்பில் அளித்தது:

ஸ்ரீமத், சுவாமிகள் அவர்கள் தோண்டைநாடு, பாண்டிய நாடு, சோழநாடு முதலியவற்றில் பல நல்லிடங்களைச் சார்ந்து ஆங்காங்கு நல்லறிவுரைகளாலும், ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் வழி

யாட்டாலும் மக்களை நல்வழிப்படுத்தி உய்ய வழிகாட்டும் பெருங் கருணையை நாங்களும் பேரன்புடன் இன்புறும் வாய்ப்பு முன்பும் கிடைத்தது; இப்போழுதும் கிடைக்கிறது. இதற்கு ஏதுவாகிய சுவாமிகளின் சீரிய வரவை நாங்கள் எல்லோரும் பெரு மகிழ்வுடன் ஏற்றுப் போற்றுகின்றோம்.

ஸ்ரீமத் சுவாமிகள் வடமோழிக்கடல்; தென்மோழிக் களஞ்சியம். ''எண்ணிய எண்ணியாங்கு எய்தும்'' ''எதிர தாக்காக்கும் அறிவு'' என்னும் திருக்குறள் வசனத்திற்குச் சிறந்த ஓர் இலக்கியமாகத் திகழும் அத்தகு பெருமையுடைய ஞானசீலர்களாகிய சுவாமிகளின் நல்வரவும், அச்சீலரின் வழி வரும் புதுப்பெரியவாளின் வரவும் எங்கட்கேல்லாம் என்றும் வாய்த்தற்கு அரிய தனிச் சிறப்புடைய பேருகும். சுவாமிகள் அவர்கள் இனிது வாழ எல்லாம்வல்ல பரம்போருளைப் பிரார்த்திக் கிறோம்.

தருமையாதீனம் வேதசிவாகமம், திருமுறை, உலகியல் முதலிய பல துறைகளிலும் கல்விதானம் வழங்கிவருகிறது. அந்த நல்வழக்கத்தைப்பேறும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்து வருகிறது. அதன் குளிர்நிழலில் தங்கியிருக்கும் எங்களுடைய வாழ்க்கை செம்மைப்பட ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானத்தில் பல வழிகளிலும் திருவருள் பாலித்து வருகிறார்கள்.

அதிலும் சிறப்பாக ஸ்ரீமத் சுவாமிகளைப்போன்ற பெரிய திரு மடத்துத் தலைவர்களையும் மகான்களையும்இங்குக் கண்டு வணங்கி ஆசிபெற்று அருளுரைகேட்கும் பெரிய வாய்ப்பும் நல்லூழும் எங்களுக்கு இருப்பதை எண்ணி எண்ணி பெருமைப்படுகிறோம். இந்த நல்ல சகாப்தத்தில் வாழும் ஆஸ்திகப் பெருமக்களும் இந்த அரிய காட்சியைக் கண்டும் உபதேச மொழிகளைக் கேட்டும் பெரும்பயனடைந்து வருகிறார்கள். இது சமய உலகில் ஒரு பெரிய சிறப்பை அளிக்கிறதேன்று பல பெரியோர்களும் பாராட்டுவதையும் அறிந்து நாங்களும் அவ்வுபதேச வழிநின்று பயன் பெறுவோம்.

வாழ்க நமது சமய நிலையங்கள்! வாழ்க நம் குருமணிகள்! வாழ்க! வாழ்க!

* "மனக்கோயில்" *

வித்துவான், ம. சிவசம்பு

(மலர் 20, இதழ் 3, பக்கம் 163 இன் தொடர்ச்சி)

காட்சி 5

இடம்: புலவர் தண்டியின் வீடு.

பாத்திரங்கள்: புலவர் தண்டி-சீடர்கள் இருவர்-இராமு-சோமு இராசசிம்மன்.

காட்சி விளக்கம்

[புலவர் தண்டி ஊருக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சீடர்கள் தங்கள் நிலைமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் தண்டி ''அவந்தி சுந்தரி கதா'' நூலை எழுதி இருப்பதாகச் சொல்லுதல். சீடரிடம் கொடுக்கும் பொழுது அரசனே அதைப் பெறுதல்]

இராமு: தம்பி! ஏன் கவலையாக இருக்கிறாய்?

சோமு: கவலைப்படாமல் என்ன அண்ணா செய்ய! நீ புலவர் தண்டியோடு ஊருக்குச் செல்ல இருக்கிறாய். சில ஆண்டுகள் அவரோடு இருந்து சிறந்த கல்விமானாக விளங்குவாய். என் நிலையைப்பார்!

இராமு: உன் நிலைக்கு என்ன தம்பி!

சோமு: நான் எந்தநேரம் 'கடிகாவில்' சேர்ந்தேனோ, பஞ்சமும் வந்தது; கடிகாவும் நின்று விட்டது. குருகுலவாசம் செய்து ஏதாவது படிக்கலாம் என்று வந்தேன். என்பாவம் இங்கும் விடவில்லை. புலவர் பெருமானை ஊரைவிட்டே துரத்து கிறதே. அவர் சொல்லிவைத்த பாடங்கள் கல்லில் எழுதி வைத்தது போல் என் மனத்தில் பதிந்துவிட்டது. அவ

எழுதிய 'காவ்யாதர்ஸம்' என்னும் அணிஇலக்கணத்தின் பெருமையை என்னென்று சொல்வது. அவரிடமே அதைப் பாடமாகக் கேட்கலாம் என்று வந்தேன். கொடுத்து வைக்கவில்லையே.

இராமு: இதற்காகவா, கவலைப் படுகிருய்? நீயும் எங்களோடு வந்துவிடேன்.

சோமு: நான் வந்துவிட்டால், என் தாய் தந்தையர்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய வேறு யாரும் இல்லையே என்று கவலைப்படுகிறேன்.

(இதைக் கேட்டுக்கொண்டுத் தண்டியார் வருதல்)

தண்டி: சீடர்களே! உங்கள் கல்வியின் ஆர்வம் எனக்கு எல்லை இல்லா இன்பம் உண்டாக்குகிறது. நீங்கள் எல்லா நலன்களும் பெற உங்களை வாழ்த்துகிறேன். சோமு! நீ கவலைப்படாதே! நீயும் என்னேடுவா! தாய் தந்தைகளைக் கவனிக்க நான் ஏற்பாடு செய்கிறேன்! இராமு! பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு எல்லாம் தயாராகி விட்டதா?

இராமு: ஆம் சுவாமி:

தண்டி: சீடர்களே! நான் 'அவந்தி சுந்தரிகதா' என்ற அருமையான நூல் ஒன்று செய்துள்ளேன். அதில் இன்றைய நாட்டின் நிலையையும், இராசசிம்மனின் பண்பையும் விளக்கியுள்ளேன். இதை இராசசிம்மனிடம் நான் கொடுத்ததாகக் கொடுத்து வரவேண்டும். இராசசிம்மனிடம் நான் நேரில் சென்று விடைபெறுதல் என்பது முடியாத காரியம். நூலோ அரசனிடம் சேரவேண்டிய மிகமுக்கியமான நூல்.

இராமு: சுவாமி! அந்நூலை நாங்கள் பார்க்கலாமா?

தண்டி: சீடர்களே! நானே படித்துக் காட்டுகிறேன்!
(நூலில் சில பகுதிகளைப் படித்துக்காட்டுகிருர். இராசசிம்மன் மறைவில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிருன்.

படித்து முடித்து பின் சீடரிடம் நூலைக் கொடுக்கிறார். அரசனே நேரில் வந்து நூலைப் பெறுகிறான்).

தண்டி: யார்! இராசசிம்மனா?

இராச: ஆம் சுவாமி! நானேதான்!

தண்டி: புவியை ஆளும் அரசர், ஓர் ஏழைக்கவிஞன் வீட்டுக்கு வருவதா! சொல்லி அனுப்பினால் நான் வந்திருப்பேனே.

இராச: புவி அரசர்கள் வாழ்வதெல்லாம், தங்கள் போன்ற கவி அரசர்களின் ஆசியால் தானே! கவியரசர் முன் புவி அரசன் ஒரு துரும்பு சுவாமி! நான் சொல்லி அனுப்பி நீங்கள் என் அரண்மனைக்குவர அவ்வளவு கொடுத்து வைத்தவனா? நான் இன்னும் சிறிது காலம்தாழ்த்தி இருந்தால் தங்களைக் காணமுடியாமல் போயிருக்கும். என் முன்னோர்கள் செய்த புண்ணியம் இப்பொழுதாவது என்னை இங்குக் கூட்டிவைத்தது. சுவாமி! தாங்கள் நாட்டை விட்டுப் போகவேண்டிய அளவுக்கு என்ன தவறு செய்து விட்டேன்! என்னை மன்னியுங்கள் சுவாமி!

தண்டி: இராசசிம்மா! உன் தாராள சிந்தையும், உயர்ந்த பண்புமேதான் என்னை இந்த முடிவுக்கு வரச்செய்தன. சிம்மவிஷ்ணு எனது பாட்டன் 'பாரவியை' அவைக்களப் புலவனாக்கினான். அதுமுதல் எங்கள் குடும்பத்தினர் எல்லோரையும் காப்பாற்றி வருகிறீர்கள். எங்கள் நலமே தங்கள் நலமாகப் போற்றி வருகிறீர்கள்.

இராச: அப்படியிருந்தும் ஏன் சுவாமி தாங்கள் போகவேண்டும்?

தண்டி: இராசசிம்மா! நாட்டிலோ எங்கும் பஞ்சம், பசி, வறுமை, வறுமையால் அறிவு வளராது; வறுமை அறிவைக் கெடுக்கும். மறதி புகழைக் கொல்லும். அதுபோல வறுமை அறிவைக் கொல்லும், வறுமையால் அறிவு கெடும் என்பது மட்டும் அல்ல; சிறந்த அறிவு இருந்தாலும் பயன் படாது. வறுமை உள்ளவன் நல்ல நூற்பொருளை எடுத்துச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். வறுமை நீங்கியவுடன் மீண்டும் வருகிறேன்.

இராச: சுவாமி! மன்னிக்க வேண்டும்; நாடு நல்ல நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. பகை அரசர்களும் அடங்கி விட்டார்கள். மழை வேண்டி வச்சிரயோதி பிரார்த்தனை செய்கிறார். நாட்டில் உள்ள மக்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கவும், துன்பம் போக்கவும் நாட்டிற்கு நல்லதொரு பணியைச் செய்யவும் திட்டம் வகுத்துள்ளேன். நாளையே "கைலாசநாதர் கோயில் திருப்பணியைத் தொடங்கப் போகிறேன். தாங்கள்தான் அப்பணியைக்கூட இருந்து நடத்தித்தர வேண்டும்.

தண்டி: நல்லது, அரசே! நாளை கைலாசநாதர் கோயில் திருப் பணித் தொடக்க விழாவிற்கு வருகிறேன். கவலை வேண்டாம்.

இராச: நான் செய்த பாக்கியமே! பாக்கியம்! தாங்கள் என்பால் கொண்டுள்ள அன்பை என்றும் மறவேன்சுவாமி!

வாராரோ அவர்?

வேலூர். க. சோக்கலிங்கம்

இராகம் : பூர்விகல்யாணி] [தாளம் : ஆதி

பல்லவி

இன்னமும் வராததேனோ—தோழி
புன்னகைசெய்தேஎன் நெஞ்சம்புகுந்தவர் (இன்)

அனுபல்லவி

முன்னந்தன்மார்பினில் முலைச்சுவட்டழுந்த
என்னையேபுல்லிப்பேரி ன்பமளித்தவர் (இன்)

சரணம்

சொன்னசொல்தவறிட வல்லவரோஎந்தன்
இன்னலைக்கண்டும் இனி இரங்காரோ
அன்னவர்க்கேவேறு அன்புடையாள்எவளோ
மன்னவர்வேலூர் வைத்தியநாதர் (இன்)

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

(மலர் 20, இதழ் 1, பக்கம் 41 இன் தொடர்ச்சி)

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மடமான் குளம்போ படவரவோ
மணிவட் டகையோ நிதம்பமென
வகுப்பார் முனிவ ரோடயனு
மாலுஞ் சிவனு மற்றுமுள்ள
விடவா னவருஞ் சராசரங்க
ளிருக்கே முதலா கமநூலு
மெல்லாம் பிறந்தும் பிறவாம
லிருக்குந் திரிகோ ணங்களிலே.
தடவா னவையுந் தாமரையுந்
தவத்தோர் குழுவுந் தனிமுதலுந்
தங்கச் சிகர கோபுரமுந்
தயங்குங் கோயிற் சிவஞானக்
குடமா மிரண்டு குறிகாட்டிக்
குருவா ழிடத்தைக் குறிப்பறியார்
குயிலே மயிலே யேமையளித்த
வுமையே யவிடங் கூட்டுவையே. 74

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கூட்டரக் கணைய சேவ்வாய்க்
கோடியிடைப் பனிங்கு மேனி
யேட்டினி லேழுதா வேதத்
திறைவியேன் னித்யத் துள்ளே

பாட்டுரைக் கெழுந்த ஞான
பாரதி பதுமத் தண்பூ
நாட்டமுற் றிருந்தாற் சேரு
ஞானமுங் கிடைக்கு நாளே. 75

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நாளை நாளையென வெண்ணி யெண்ணிவெகு
நாளுமே கழிய நாயினேன்
வேளை வேளையென நின்று நின்றுருகி
வேறுவே றுசெயல் மேவினேன்
காளை யேறியிரு வோரு மோடிவரு
காலமேது புகல் காரணி
பாளை யோதிகரு ணாக ரி பரம
பாலலோ சனி பரம்பரி. 76

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பரியேறி நியிடத்தி லரியசிவ ஞானவழி
பண்புட னடந்தே றியுன்
பாததா மரைநிழற் கீழ்மேவி யென்வினைப்
பவவிடா யற வருள்வாய்
நரியேறு புரவியென நடனமிடு வருபரம
நாதற் குகந்த மணியே
நாரணி பூரணி பசுபாச வினையற்ற
நன்மருந் தான மச்சை
வரியேறு தோகைமயில் வடிவான கிள்ளையே
வரையரை யன் மா ணிக்கமே
மன்னுமுச் சுடராகி மணிவிளக் காகியுறு
மாமாயை வல்ல சதுரி
திரிபுர மெரித்தசிவ காமி யார்ப் பதி கெவுரி
தேவி யுமை சத்தி விமலி
தேடியோரு வடிவெனச் செப்போணு வானந்த
சித்தியுள் சித்த முணரே. 77

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உணருமறை முனிவர்களு மிமையவரு மலரயனு
முவரிநிற மணிய ரசனுந்
துணைபதும சரணமல ரிடமுடிகள் பணியவரு
துரையரசி வரைபு தல்வியே
மணமொளியூ றோசைசுவை வழிமனது கழியுமிது
மறியவொரு வரமு தவுவாய்
நிணமுருகு மயில்விழியை யெனதுகுறை தவிரவரு
ணிமலியருள் பொழியு முகிலே. 78

முகிலென நிறத்தகோடி வெயிலென நிறத்தமுழு
மதியெனு முகத்த ரசியே
யெகினமு மொளிக்குநடை யிளமுலை கதித்தமலை
யிறுமிறு மெனத்து வளிடை
ஞெகிழிக ளரற்றவரு சரணபது மத்துணையை
நிமிடமு நினைக்க வறியேன்
சகிதபர மன்மிரிய சயனிமவு னத்துருகு
தருணிக ருணைச்ச துரியே. 79

கலிவிருத்தம்

சதுர்மாமறை முடிவாகிய தனிஞானசு கத்தைப்
பதுமாகர மதனுலருள் பரிபூரண மயிலே
யிதுமாதவ முரைக்குங்குறி யெந்தாயெனை வந்தாள்
முதுமாதவர் துதிகாரண முடிவேதவ வடிவே. 80

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வடிவெடுத் தெழுதரிய மணியே
மரகதக் கொடியனைய மயிலே
துடியிடைப் பிடியனமென் னடையே
துதிசெயக் கருணைபுரி சுடரே
யிடியிடித் தெனவசுர ரெதிரே
யெரியரப் பியவயிரி யெழிலே
கடிதினிற் கருணைபுரி யடியேன்
கடவுளுக் கடிமையுறு கதியே. 81

(தொடரும்)

அல்லியின் கண்ணீர்*

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். சொ. சிங்காரவேலன், B. A.

எழில்விரியும் தடாகத்தே இருந்த அல்லி
எங்கெங்கும் தன்மணத்தை வாரிவீசிப்
பொழில்எல்லாம் தன்புதுமை மயக்கந் தன்னில்
புன்னகையில் மயங்கவிட்டுப் பூத்ததன்று. 1

மெல்லிசைபா டிக்கொண்டே கரிய வண்டு
மிக்கஅன்பும் நட்புறவும் மிகவும்கொண்டு
அல்லிமலர் அருகுவந்து ஆடிப் பாடி
அகமகிழச் செய்ததனைத் தழுவிற் றோடி ! 2

" யாரங்கே ? " எனக்கேட்ட அல்லி காதில்
" யாரா ? நான் உன்நண்பன்; செவிகட்கேற்ற
ஆரமிர்தாம் கதைகூறிக் களிக்க வைப்போன்;
அன்பே ! என் இயல்பதனை அறியாயோ நீ ! 3

நான்விரிக்கும் சிறுகதைக்குக் கைம்மாறாக
நாடியேதும் நீகொடுக்க வேண்டாம்; அன்பே !
தேன்விரிக்கும் படியுன்னை உரைக்க மாட்டேன் ;
திருப்புமுகம் ! ' எனஉரைத்துப் பாடும்வண்டு ! 4

இதழ்விரித்து வரவேற்று இன்பப்பண்ணில்
இதயத்தைப் பறிகொடுத்த அல்லி, இன்ப
இதழ்க்குள்ளே புகுந்துவிட்ட பொல்லாவண்டு
இயம்பிற்றுத் தன்னிதய மகிழ்ச்சிதன்னை:- 5

---

* Thomas westwood (1814 - 1888. A. D.) எழுதிய The Bee and the Lily என்ற கவிதையைத் தழுவியது.

'தண்மையுநல் வெண்மையுமாய் இருக்கும்வீடு ;
தன்னிகரில் சுவைத்தேனும்; முகர்ந்துபார்ப்பேன்;
பெண்மையினிற் சிறந்தவளே ! சுவைப்பேன் ; இந்தப்
பிறவியினை மறந்திடுவேன் ! ஆ ! ஆ !' என்றே. 6

வண்டுரைத்த வாய்மொழியைக் கேட்ட அல்லி,
'வளர்நட்புச்செல்வனே ! நன்கு உண்பாய்!
கண்டுவைத்த விருந்தினன்நீ யன்றோ ' என்று
கனிமொழியாற் கூறிடவும் பின்னும், வண்டு, 7

பண்ணிசைத்துத் தேன்முழுதும் பாடிஉண்டு
பாவம், அந்த மலரின்உள் ளிடத்திலெங்கும்
கண்மலர்த்தி எச்சமின்றி உண்ட பின்னர்
கவின்மலர்அக் குறும்பனைப்பார்த் திவையுரைக்கும்:- 8

" விருந்துண்டாயோ, எனது இனிய நண்பா !
விளம்புவையோ, என்செவியில் முன்னே சொன்ன
பெருந்துறுமக் கதைதன்னை; வா வா !'' என்று
புன்னகை யோடுடல் வெளுத்துக் கேட்டபோது 10

மருவியந்த மலர்ப்பெண்ணை முழுதும் துய்த்து
மனமயக்கிப் பண்ணிசைத்து மலர்க்கூட்டுள்ளே
ஒருதுளியும் இன்றியதன் தேனை உண்டு
உவந்திருந்த களிவண்டு விடைசொல்லாமல் 11

பண்ணிசைத்த படிஎழுந்து பறந்துசெல்லப்
பார்த்திருந்த அல்லிமலர் விட்ட கண்ணீர்
மண்ணிதனில் தந்திரத்தால் பிறரை ஏய்க்கும்
மாந்தர்தமக் கறிவுரையோ? துன்ப ஊற்றோ ! 12

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், செ. செல்வப்ப முதலியார்

உலை யிறங்கச் செயு மோதனம் வெந்திடி லொண்மதியின்
கலை யிறங்கச் செயும் பூரணை வந்திடிற் காய்க்குமக்க
விலை யிறங்கச் செயும் பஞ்ச மிகுந்திடின் வீறுகெட்டுத்
தலை யிறங்கச் செயும் வேட்டேனப் பேசிடிற் சூர்குழலே, 78

செய்திகள்

* *

தருமையாதீனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் விஜயம்

12—2—61 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் விஜயம் செய்தார்கள். அவர்களும், புதுப்பெரியவாளும் தருமபுரம் காவிரிக்கரையிலிருந்து எடுபிடி முதலிய மரியாதைகளுடன் அழைத்துவரப்பட்டார்கள். ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத் திருமுன்னர் ஆதீனம் காரியஸ்தர்களும், கல்விநிலைய ஆசிரியர்களும், பெருமக்களும், அன்பர்களும், குழுமியிருந்து பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்றனர்.

ஸ்ரீ தர்மபுரீசுவரர், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயங்களில் வழிபாடு செய்தார்கள். பின்னர் திருக்கயிலாய நினைவு விளைவுகளைப் பார்வையிட்டுத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்திற்கு வந்ததும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மலர் மாலைகள் அணிவித்தார்கள்.

அவ்வமயம் ஆதீனக் கல்விநிலையங்களின் சார்பில் ஒரு வரவேற்புக் கூட்டம் நிகழ்ந்தது. கடவுள் வணக்கத்திற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். ஆதீனக் கல்விநிலையங்களின் வரவேற்புரை ஒன்றும், மாயூரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகத்தின் சார்பில் திரு. B. திருஞானம்பிள்ளை அவர்களால் வரவேற்புரை ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டன. ஸ்ரீமத் ஆசாரிய சுவாமிகளின் பொன்மொழிகளுக்குப் பின்னர் கடவுள் வணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

ஆதீனக் கல்விநிலையங்களின்

விளையாட்டுப்போட்டி விழாவும் ஆண்டு விழாவும்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி, கீழைக்கலை உயர் பள்ளி. ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிவிழா 14—2—61ல் நிகழ்ந்தது. அன்று மாலை ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி விளையாட்டிடத்தில் பரிசளிப்புவிழா நிகழ்ந்தது. மாயூரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகத் தலைவர் திரு. B. திருஞானம் பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. கடவுள் வணக்கத்தின் பின்னர் உயர்பள்ளித் தலைமையாசிரியர் எல்லோரையும் வரவேற்ருர்கள். தலைவர் அவர்கள் விளையாட்டின் இன்றியமையாமையையும், மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளையும்பற்றிக் கூறிப் பரிசுகளை வழங்கினுர்கள். நன்றியுரையும் வாழ்த்தும் கூறியபின் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

24—2—61 அன்று மாலை மேற்படி பள்ளிகளது கழகங்களின் ஆண்டுவிழா உயர்பள்ளிக் கட்டடத்தில் நிகழ்ந்தது. மாயூரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகச் செயலாளர் திரு. K. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் ஆண்டுவிழா தொடங்கியது. உயர்பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் எல்லோரையும் வரவேற்ருர்கள். தலைவர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை கூறிக் கட்டுரை, பேச்சு முதலியவற்றில் தேர்ந்தவர்களுக்கு பரிசுகளை வழங்கினுர்கள். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், முதுபெரும் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் சொற்பெருக்காற்றினுர்கள். நன்றி கூறியபின் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

தைச்செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் நான்காம் பாதம் சுபமிராது. கவலைகளை உண்டு பண்ணும். அனுஷம் நான்கு பாதங்களும், கேட்டை நான்கு பாதங்களும் இடம் மாறச்செய்யும். அதிக செலவினங்கள் ஏற்படும். ஆனாலும் குடும்ப சுகமும், உத்தியோக உயர்வும் ஏற்படும். ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் சுபமிராது. பரஸ்தலவாஸமும் சுகபங்கமும் தரும். பூராடம் நான்கு பாதங்களும் நஷ்டத்தைக் கொடுக்கும். செய்யும்காரியங்களில் தவக்கம் உண்டுபண்ணும். ஆனாலும் தெய்வபலம் முன்னின்று காக்கும். புத்திராதிகளால் கீர்த்தி ஏற்படச் செய்யும். உத்திராடம் முதல் பாதம் சுகம் உண்டுபண்ணும். கவலைகள் நீங்கும். நூதன முறையில் வாழ்க்கைத்தரம் உயரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் சுபமாய்இராது. வியாதியைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படச்செய்யும். அடிக்கடி சஞ்சாரம் தரும். திருவோணம் நான்கு பாதங்களும், அவிட்டம் 1, 2 பாதங்களும் உத்தியோக உயர்வைக் கொடுக்கும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். ராஜாங்கத்தால் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கச் செய்யும். புதன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். தூர தேசத்திலிருந்து சந்தோஷ சமாசாரங்கள் வரச்செய்யும். தொழில் ஓங்கும். இல்லற சுகம் ஏற்படும். தர்மமூலமாய் தனவிரயம் ஆகும். மனம் சந்தோஷம் அடையச் செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தேய்வீகத்தன்மையால் பிரகாசிக்கச் செய்யும். லாபகரத்தோடு கிரய விக்ரயங்கள் ஏற்படும். ஸ்தாவர ஜெங்கம சோத்துக்கள் சேரும். ஸ்திர ஜீவனம், சுகஜீவனம் ஏற்படச் செய்யும். புத்திராதிகள் ஓங்குவார்கள். இல்லற சுகம் நீடிக்கும். வியாழன், வேள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதத்தில் உலகில் புல மாறுதல்கள் காட்டும். தோத்துநோய்களால் ஜனங்களுக்குப் பயம் உண்டு பண்ணும். உணவுப் போருள்களில் குறைகாட்டும். எங்கும் மகாஜனங்களிடம் அமைதி குறையச் செய்யும். ஈதிபாதைகள் அதிகமாகும். மகாஜனங்கள் கிராமம்தோறும் மத மாத்ஸர்யங்களை விட்டு அவரவர்களின் குலாசார மதாசாரத்துக்குத் தக்கபடி சிவ விஷ்ணு ஆலயங்களிலும், கிராம தேவதைகளின் ஆலயங்களிலும் அடிக்கடி விசேஷமான அபிஷேக ஆராதனைகளையும் செய்துகோண்டு துர்பிக்ஷநிவாரணமாகவும், உத்பாத நிவாரணமாகவும் மகாயக்ஞங்களைப் பேரியோர்களின் முன்நிலைகளில் பிரதான நகரங்களிலும், மகாநதி தீரங்களிலும் ஆஸ்தீக ஸஜ்ஜனங்கள், பிரபு ஜனங்கள் சிரத்தா பக்தியோடு ஒவ்வோருவரும் தன் கடமை என நினைந்து உலக க்ஷேமத்துக்காக மேற்கண்டவிதம் நடத்திக்கோண்டுவர தோஷங்கள் அணுகாமல் கடவுள் காப்பார். சுபம் உண்டாகும்.

குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பேயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தேளியச்சேய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வேளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்.

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.